# வள்ளுவர் கண்ட பொன்னாடு

**“உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும்**
**சேரா தியல்வது நாடு”**

பொன்னேட்டில் பொறிக்கத்தக்க வகையில் எடுத்தியம்பிய செந்நாப் போதரின் செம்மொழிக்கு ஏற்ப, சிறந்த நாடு என்பது பசி, பிணி, பகை இவையாவும் தலை காட்டாத நாடாக இருக்க வேண்டும். அத்தகைய நாடே நம் சிங்காரச் சிங்கை. வெற்றியை நோக்கிப் பீடு நடைபோட்டு வரும் சிங்கப்பூரில், மக்களிடையே நாட்டுப்பற்றை வளர்ப்பதற்கு உறுதுணையாய் இருப்பவை நம் நாட்டின் தேசிய தினக் கொண்டாட்டங்களே ஆகும்.

தேசிய தினக் கொண்டாட்டத்தின் போது சிங்கப்பூரர்கள் அனைவரும் ஒன்று கூடுகின்றனர்; தேசிய தினக் கொண்டாட்டத்தைக் கண்டு களிக்கவும் அதில் கலந்து கொள்ளவும் திரள்கின்றனர். இவ்வாறு, மக்கள் நாலாப்பக்கங்களிலிருந்தும் வந்து ஒரே இடத்தில் ஒன்று கூடுவது அவர்களிடையே காணப்படும் ஒற்றுமையை வளர்க்கிறது; வேற்றுமைகளை அடியோடு மறக்கச் செய்கிறது.

**“ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு-நம்மில்**
**ஒற்றுமை நீங்கில் அனைவருக்கும் தாழ்வே”**

என்று பாரதியார் கூறினார். எனவே, ஒற்றுமையை வளர்த்து நல்வாழ்வு வாழ தேசிய தினக் கொண்டாட்டங்கள் உதவுகின்றன. அவை, பொதுவான இலட்சியத்தை உண்டாக்கி, நாட்டுக்காகப் பாடுபட ஊக்குவிக்கின்றன. எனவே, தேசத்தின் மீது பற்றுதலை வளர்ப்பதற்குத் தேசிய தினக் கொண்டாட்டம் முக்கியப் பங்காற்றுகிறது.

தேசிய தினக் கொண்டாட்டங்களின்போது மாணவர்கள் தாங்களே பள்ளிகளில் நிகழ்ச்சிகளைப் படைக்கின்றனர்; இத்தகைய நிகழ்ச்சிகளுக்குப் பல வாரங்களாகத் தயார் செய்வதில் முழுமூச்சாக இறங்குகின்றனர். இவ்வாறு, கடுமையாக உழைத்து நிகழ்ச்சிகளைப் படைப்பதை நாட்டிற்கு சேவை செய்வது என்றே கருதலாம். இராணுவப் பயிற்சியில் ஈடுபடும் இளையர்களோ தங்களது நாட்டிற்காகத் தேசிய தினக் கொண்டாட்டங்களில் பல சாகசங்களைப் புரிகின்றனர். இவ்வாறு, நாட்டிற்காக அவர்கள் தயாரிக்கும் நிகழ்ச்சிகள் யாவும் நாட்டின் மீது அனைவரும் பெருமிதங்கொள்ள வழிவகை செய்கின்றன. ‘‘நாடு உனக்கு என்ன செய்திருக்கிறது என்று கேட்காதே; நீ உன் நாட்டிற்கு என்ன செய்திருக்கிறாய் என்று கேள்’’ என்று முன்னாள் அமெரிக்க அதிபர் ஜான் எஃப் கென்னடி கூறியதுபோல, நாட்டிற்காக அவர்கள் செய்யும் சேவையும் கொண்டாட்டத்தின் போது தயாரிக்கும் நிகழ்ச்சிகளும் அவர்களை நாட்டுப்பற்று மிக்கவர்களாக ஆக்குகின்றன.

’’சிங்கநடை போட்டுச் சிகரத்தில் ஏறு; சிகரத்தை அடைந்தால் வானத்தில் ஏறு’’ என்ற பாடல் வரிகள் முக்கியமான பாடத்தைக் கற்றுக் கொடுக்கின்றன. இன்று

சிங்கப்பூரர்கள் நாட்டுப்பற்று மிக்கவர்களாகக் திகழத் தேசிய தினக் கொண்டாட்டங்கள் உதவியுள்ளன; சிகரத்தை அடைந்துவிட்டோம். எனினும், சிகரத்தைத் தாண்டி வானத்தைத் தொட முயற்சி செய்ய வேண்டும். எனவே, மேலும் சிறப்பாகத் தேசிய தினக் கொண்டாட்டங்களைக் கொண்டாட வேண்டும்.

தேசிய தினத்தை மேலும் சிறப்பாகக் கொண்டாடப் பள்ளிகளுக்குக் கூடுதல் அதிகாரமும் சுதந்திரமும் அளிக்க வேண்டும். செலுத்த வேண்டும். ‘‘இன்றைய இளையர்கள் நாளைய தலைவர்கள்’’ என்பதற்கேற்ப, சிங்கப்பூர் இளையர்களுடைய நாளங்களில் ஓடும் இரத்தத்தோடு நாட்டுப்பற்று இரண்டறக் கலக்க வேண்டுமெனில் அவர்களிடையே நாட்டுப்பற்றை வளர்த்தெடுக்க வேண்டும். எனவே, தேசிய தினம் நெருங்கி வரும்போது, பள்ளிகளில் தேசிய தினத்தைக் கருவாகக் கொண்டு பல்வேறு போட்டிகளை நடத்தலாம். மாணவர்கள் தங்களது படைப்புகளில் அக்கறை காட்டுவதோடு அவர்களுடைய நாட்டுப்பற்றும் வலுப்பெறும், அதோடு, மாணவர்கள் சிங்கப்பூரைப் பற்றி மேலும் அறிய இப்போட்டிகள் வாய்ப்பாக அமையும். எனவே, இத்தகைய போட்டிகள் தேசிய தினக் கொண்டாட்டத்தின் ஒரு பகுதியாக நடத்தப்பட வேண்டும்.

மேலும், தேசிய தினக் கொண்டாட்டத்தின்போது சிங்கப்பூரில் நிலவும் பல இனச் சமுதாயத்தைப் பிரதிபலிக்கும் கலாச்சார மற்றும் பண்பாட்டு நிகழ்ச்சிகளுக்கும் கண்காட்சிகளுக்கும் ஏற்பாடு செய்ய வேண்டும். பல இனச் சமுதாயத்தில் வாழும் நாம், ‘‘ஜாதிகள் இல்லையடி பாப்பா’’ என்று முண்டாசுக் கவிஞன் பாரதியார் கூறியதுபோல இன, மத வேற்றுமைகளை மறந்து ஒற்றுமையாக வாழ்வதன் அவசியத்தை இக்கண்காட்சிகளின் மூலம் உணர்த்தலாம். ‘‘காக்கையைப் பாரு கூடிப் பிழைக்கும்’’ என்பது பாடல் வரி விளக்கும் கருத்திற்கு ஏற்ப இன ஒற்றுமையே நம் நாட்டின் வெற்றிக்கு அடிப்படை என்பதை அறிந்தால், நாட்டின் மீது பற்றுதல் ஏற்படும்; சமுதாயத்தோடு நம்மைப் பிணைக்கும்.

**“பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும்**
**நற்றவ வானினும் நனி சிறந்தனவே”**

நம்மைத் தாலாட்டி வளர்த்த சிங்கப்பூருக்கு நாம் செலுத்தும் நன்றிக் கடனே நாட்டுப் பற்று. இத்தகைய நாட்டுப் பற்றைத் தேசிய தினக் கொண்டாட்டங்களே வலுப்படுத்துகின்றன என்பதில் எள்ளளவும் ஐயம் இல்லை. எனவே, தேசிய தினத்தைச் சிறப்பாகக் கொண்டாடுவோம்! நாட்டுப்பற்றினால் வையகத்தையே வசப்படுத்துவோம்!

**நல்லம்மை ரவி**
**உயர்நிலை 4 உயர்தமிழ்**
**மெத்தடிஸ் பெண்கள் பள்ளி**